Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகை யின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 67 துயரத்தினால் என் கண்கள் குழிவிழுந்து போயிற்று சங்.6:7 ஏப்ரல் 2021 No.4

கிறிஸ்து எல்லாவற்றிற்கும் போதுமானவர்

The All-Sufficency of Christ

F.B. Meyer

இயேசு நேசித்த குடும்ப சகோதரிகள் லாசருவின் மரணத்தின்போது அவரது பாதத்தில் விழுந்தபோதும், சிமிர்னா சபை மரண பரியந்தமும் உண்மையாயிருக்க ஒத்தாசை தேவைப்பட்டபோதும், ஜீவ தண்ணீருக்காக ஒரு ஆத்துமா கதறியபோதும், ஜீவ விருட்சத்தை அடைய நகரத்தின் வாசலைத் திறக்க வேண்டிய சூழலிலும் தேவன் நமக்குத் தரும் வல்லமையான வார்த்தைகள்: "நான் அல்பாவும் ஒமேகாவும் ஆதியும் அந்தமும் முந்தினவரும் பிந்தின வருமாயிருக்கிறேன்" என்பதாகும் வெளி22:13.

நாம் கிறிஸ்துவோடு தனிப்பட்ட நெருங்கிய உறவு கொண்டிருக்கிறோமா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வது முதன்மையானது. நாம் அவரைக் குறித்து கேட்கிறோம், படிக்கிறோம், பேசுகிறோம், தெரியும் என்று சொல்லுகிறோம். ஆனால் உண்மையாகவே அவரைக் குறித்து என்ன அறிந்திருக்கிறோம்? அன்று பிலிப்புவிடம் சொன்னது போல நம்மிடமும் அவர் "..... இவ்வளவு காலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீங்கள் என்னை அறியவில்லையா?" என்று கவலையுடன் கேட்கவில்லையா? அப்.பவுல் "நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் ..... அறிகிறதற்கும் ..... அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்" பிலி.3:7-11.

தேவையில் தேர்வு

மானிட வாழ்வில் அடிக்கடி நமது அவசர தேவைகளில் மட்டுமே அவரை அறிகிறவர்களாயிருக்கிறோம். உதவியற்ற நமது நிலை, தோல்வி ஆகியவற்றால் அவரது கிருபையை பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகளும் உண்டு. ஆனால் தேவையின் உச்சநிலைகளில் மட்டுமே இயேசு கிறிஸ்து நமக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருக்கிறார் என்று உணர ஆரம்பிக்கிறோம்.

பலத்த மதிலால் சூழப்பட்ட எருசலேமை முற்றுகையிட சனகெரிப் வந்தபோதுதான் ஏசாயாவும் எசேக்கியா அரசனும் தேவனைக் குறித்து, "மகா விசாலமான நதிகளும், ஆறுகளுமுள்ள ஸ்தலம் போலிருப்பார்" ஏசா.33:21 என்பதனை அறிந்து கொண்டனர். அந்த நதி பாதுகாவலானதும் தேவனுடைய நகரத்தை சந்தோஷிப்பதுமான நதி. அது உலக பிரகாரமான நதியல்ல. நதி செழிப்பைக் குறிக்கும். தேவனே அந்த நதி.

யூதர்கள் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பி வந்தபோது அகாவா நதியை கடக்க நின்றனர். திருடர்கள் நிறைந்த பெரிய வனாந்தரத்தைக் கடப்பது எப்படி என ஆலோசித்து இணைந்து ஜெபித்தனர். தேவன் அவர்கள் முன்னாகச் செல்வதாகவும், பின்னாக பாதுகாப்பளிப்பதாகவும் வாக்களித்தார். யெகோவா தேவை களைப் பூர்த்தி செய்தார். திரளான சேனைகளாலும் பெற்றுக்கொள்ள முடியாத பாதுகாப்பினைப் பெற்றனர்.

கடின வியாதியும் தொடர்ந்து மரணமும் ஏற்பட்டிராவிட்டால் அவனது சகோதரிகள் ஆண்டவரின் உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிந்திருக்க முடியாது. அந்நிகழ்வு மூலம் தாம் உயிர்த்தெழுதலும் ஜீவனுமானவர் என்பதை அறியச்செய்தார்.

தனது மாம்சத்தில் ஒரு முள் கொடுக்கப்படாமலிருந்தால் அப்.பவுல் கிறிஸ்துவின் பெலனை அறிந்திருக்க முடியாது. இரட்சகரின் கிருபையின் அனுபவத்தையும் அனுபவித்திருக்க முடியாது. பின்னர்தான் பாடுகள் தேவனுடைய இரட்சிக்கும் உதவியைப் பெற ஏதுவானவைகள் என அறிந்து கொண்டார். தமது பெலவீனத்திலே தேவ பெலன் பூரணமாய்விளங்க தம்மை ஒப்புவித்துவிட்டார். அவரது பெல வீனத்தில்தான் தேவனுடைய பெலன் அதிக அளவில் அவரில் வெளிப்பட்டது.

தனிமையின் வேளைகளில்

நம்முடைய தனிமை நம்மூலம் இயேசு தம்மை வெளிப்படுத்த வாய்ப் பளிக்கிறது. இயேசுவுக்கு அன்பான சீஷன் பத்மு தீவில் தனிமைப்படுத்தப் பட்டிருந்தார். அப்போதுதான் அவர் ஆவிக்குள்ளானார். ஆவியானவர் தம்மை அவருக்கு வெளிப்படுத்தினார். அந்த அனுபவம் மனித மாம்சத்தாலும் இரத்தத்தாலும் சகிக்கக்கூடாததாயிருந்தது. "நான் அவரைக் கண்டபோது செத்த வனைப் போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்" வெளி.1:17. பின்பு அவர் தமது கரத்தை இவர்மீது வைத்து, இவரைத் தூக்கி நிறுத்தி தமது நித்திய ஜீவனைக் குறித்த இரகசியத்தை வெளிப் படுத்தினார். இவ்விதக் காட்சியைப் பெற சில முற்கால பக்தர்கள் தனிமையான இடங்களுக்குச் சென்றனர். ஆனால் நாம் அமைதலாகக் கடற்கரை ஓரமாகச் சென்றாலும் மலை மீது ஏறி நடந்தாலும் ஏன்? நமது சொந்த அறையில் உட்கார்ந்திருந்தாலும்கூட இந்த அனுபவத்தினை பெறலாம். அதற்கு வாழ்வின் வண்டல் கீழே படிந்துவிட வேண்டும். கண்களிலிருந்து உலகத்தின் கவர்ச்சி மறைய வேண்டும். ஆவியின் பார்வை காணப்படாத தேவன் மீதிருக்க வேண்டும். மட்டுமின்றி களைப்பின்றி ஜெபத்திலும் தியானத்திலும், கிறிஸ்தவ அன்பிலும் தரித்திருக்க வேண்டும். இவற்றில் ஏதேனும் ஒன்று குறைவு பட்டாலும் ஆண்டவர் நம் அருகிலிருப்பதைக் காணவும் உணரவும் முடியாது.

தாமஸ் கெம்பீர் என்பவர், "உனக்கு எதிராகக் கதவைப் பூட்டிவிட்டு அன்பான இயேசுவைக் கூப்பிடு. அவர் அருகிலிருக்கும் போது எதுவுமே கடின மாய் தோன்றுவதில்லை. மாறாக அவர் அருகில் இல்லாதபோது எல்லாமே கடினமாகிவிடுகிறது. அவர் ஒரு வார்த்தை பேசிவிட்டால் மிகப்பெரிய ஆறுதல் உண்டாகும். அவர் நம்மோடு இல்லாவிடில் நாமிருக்குமிடம் பயங்கரமான நரகம் போலிருக்கும், அவர் நம்மோடு இருப்பது இனிய பரதீசின் அனுபவம்" என்கிறார்.

ஆண்டவரோடுள்ள உறவு உள்ளான தூண்டுதல் நிறைந்தது. யோவானுக்கு தம்மை வெளிப்படுத்திய போது உடனே அதை எழுதுவதற்கான கட்டளையும் கொடுக்கப்பட்டது. கிறிஸ்துவின் உறவால் பிரகாசிப்பிக்கப் பட்ட ஆத்துமா கேரூபீன்கள் போல கீழ்ப்படியக் கூடியவை. எனவே பரிசுத்த வான்கள் காத்திருந்து இயேசுவோடுள்ள உறவால் வல்லமைப்படுத்தப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு, வழிகாட்டுதலையும் போதனையையும் பெற்று ஊழியத்தில் முன்னேறுகிறார்கள்.

தேவனோடுள்ள தனி உறவால் கர்த்தருடைய நாளில் யோவான் பத்மு தீவில் கேட்டது போல பாடல்களையும், ஜெபங்களையும் ஆவியில் கேட்கலாம். ஆண்டவரது தோழமையைத் தொடர்ந்து பெறலாம். ஒருவேளை இத்தகைய அனுபவம் உங்களுக்கு இல்லாவிட்டால் அவர் நமது அருகில் வந்து, 'பயப்படாதே' என்று கூறி நம்மை நடத்துவதைக் கற்றுக் கொள்ள முடியாது. அவர் நம்மைத் திக்கற்றவர்களாகவிடார்; நம்மிடம்

(3-ம் பக்கம் பார்க்க)

முக்கிய அறிவிப்பு

ஒவ்வொரு மாதமும் 10-ம் தியதிக்குள் பத்திரிகை வரத் தவறினால் உடனே எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்

மொபைல் : 95432 21008

வாட்ஸ்ஆப் : 94897 40295

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

இம்மாத பொன்னான சிந்தனை

வேலை ஸ்தலத்தில் சந்தித்த உச்சக்கட்ட நெருக்கத்தினிமித்தம் விடுப்பு எடுத்து ஜெபிக்க அமர்ந்தார் ஒரு சகோதரர். மரண செய்தியினி மித்தம் மனைவி அவசரமாய் பக்கத்து ஊருக்கு கிளம்ப, 7 மாத மகன் அவர் பொறுப்பில் விடப்பட்டான். விளையாடிக் கொண்டிருந்த மகன் அருகில் அமர்ந்து ஜெபிக்க துவங்கிய தகப்பன் தேவபிரசன்னத்தில் ஒன்றிக்கிற வேளையில் அவன் அழ துவங்கினான். மகனை பால் குடிக்க வைத்த தகப்பன் மறுபடியும் ஜெபத்தை தொடர்ந்தார். தேவனோடு லயிக்கிற நேரத்தை அவர் எட்டிய சில நிமிடங்களில் மீண்டும் அவன் அழ ஆரம்பித் தான். தொட்டிலில் ஆட்டி தூங்க வைத்த தகப்பன் இனியாவது அவன் நன்றாய் தூங்குவான் என நிம்மதியோடு ஜெபத்தை மீண்டும் துவங்கினார். கண்ணீர் பொங்க அனைத்தையும் மறந்து விம்மி விம்மி தன் மனதிலிருக் கிறவைகளை தேவசமூகத்தில் ஊற்றுகிற நேரம் மகன் திரும்பவும் அழுதான். இயேசப்பா என் மகனை அழாமல் இருக்க பண்ணக்கூடாதா என கெஞ்சினார். 'உன் மகன் அழுதால் பரவாயில்லை என விட்டுவிட வேண்டியதானே' என பதில் வந்தது. எப்படி என் மகனை அழவிட்டு பார்த்து கொண்டிருப்பேன் என கேட்ட அந்த சகோதரரிடம், நீ அழுது கொண்டிருக்கிறாயே, அழுகிற நீ என் மகன் அல்லவா? என் மகனாகிய உன் அழுகையை பார்த்து நான் சும்மாயிருப்பேனா? என்றார் தேவன். அந்த நிமிடமே கண்ணீரும் நின்றது. வேதனையும் பறந்து, பாரமும் அகன்றது. கண்ணீரை துடைக்கிற தேவன் ஒருவர் மட்டுமே கண்ணீருக்கு காரணமான வேர் எதுவோ அதில் தலையிட்டு அற்புத மாற்றத்தை தருகிறவர். உங்கள் கண்ணீருக்கு முடிவுண்டாக்குகிற இயேசு உங்களுக்கு போதுமானவர்.

வடிக்கிற கண்ணீரே முடிவு அல்ல, களிப்போடு நீங்கள் கொண்டாடும் காலங்களே நீங்கள் கண்ட எதிர்மறைகளை விட அதிக மாயிருக்கப் போகிறது.

வாக்குத்தத்தம்

உன்னை உண்டாக்கினவரும், தாயின் கர்ப்பத்தில் உன்னை உருவாக்கினவரும், உனக்குத் துணை செய்கிறவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது : என் தாசனாகிய யாக்கோபே, நான் தெரிந்து கொண்ட யெஷூரனே, பயப்படாதே.

தாகமுள்ளவன் மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின் மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின் மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்.

அதினால் அவர்கள் புல்லின் நடுவே நீர்க்கால்களின் ஓரத்தி லுள்ள அலரிச் செடிகளைப் போல வளருவார்கள் ஏசாயா 44:2-4.

கிறிஸ்துவுக்குள் அன்பும் பிரமாவைஷே.

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2021 ஏப்ரல் மாத தூதனுக்காக என் தேவனை அதிக நன்றியோடும், வெகு மனத்தாழ்மையுடனும் துதிக்கிறேன். தினந்தோறும் வேதம் வாசித்து, தியானம் பண்ணி, இரவும் பகலும் தேவ சமூகத்தில் கண்ணீர் விட்டு அழுது ஜெபித்தும், மாதத்திற்கு ஒரு முறை உங்களுக்கு அனுப்பப்படும் **வருகையின் தூதன்** பத்திரிகை வராதா என எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கும் அருமையான தேவனுடைய பிள்ளைகளே, உங்கள் ஆவிக்குரிய, சரீர, உலகத்துக்கடுத்த தேவைகளை தேவன் தயவாய் சந்திக்கும்படி அடியேன் தினமும் 3 வேளை கருத்தாய் ஜெபிக்கிறேன்.

வருகையின் தூதன் ஒரு ஆவிக்குரிய பத்திரிகை, சுவிசேஷ பத்திரிகை அல்லது சுகமளிக்கும் பத்திரிகை அல்ல. அழியும் ஆத்துமாக்களைப் பற்றிய, பற்றி எரியும் பாரமும், வேதனையும், தரிசனமும் இல்லாதவர்களுக்கு பத்திரிகையில் அடியேன் எழுதுவது எதுவுமே புரியாது. முதலாவது வாசகர் கடிதம் ஒன்றை கீழே அச்சிடுகிறேன் :

Praise the Lord

கர்த்தருக்குள் அன்புச் சகோதரர் அவர்களுக்கு சகோதரி சுசீலா எழுதும் அன்பு மடல். கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பாக எனது கணவர் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். ஆனாலும் நான் தங்களின் வருகையின் தூதன் பத்திரிகை சந்தா அனுப்ப வில்லை. பத்திரிகை தவறாது எங்களுக்கு வந்து கொண்டுதான் இருக்கிறது. தற்போது கடந்த மாதம் பத்திரிகைக்கு ரூ.1000 அனுப்பியிருந்தேன். தொடர்ந்து எங்களுக்கு தங்களின் வருகையின் தூதன் பத்திரிகை அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு, சகோதரி சுசீலா

தொலைபேசி வழியாக வந்த செய்தி :

1. எனது கணவர் (A.G சபை போதகர்) கொரோனாவினால் மரித்துப் போனார்.
2. எங்கள் வீட்டு முகவரி மாறியிருக்கிறது.
3. ஒரு மகன், ஒரு மகளுடைய திருமண காரியங்களுக்காக ஜெபியுங்கள்.
4. சபை கட்டடத்தில் இடவசதியில்லாதபடியால் உபவாச ஜெபம் நடத்த இயலவில்லை.
5. ஊழியத்திற்காக P.N.B. வங்கி வழியாக ரூபாய் 1000 காணிக்கை அனுப்பியிருக்கிறேன்.

அலுவலக டயரியில் எழுதப்பட்ட இந்தச் செய்தியை கேட்டு அலுவலகத்திலேயே கண்ணீர் விட்டு அழுதேன்.

"அவள் அழுகிறதையும் அவளோடேகூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்து :

அவனை எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே, வந்து பாரும் என்றார்கள்.

இயேசு கண்ணீர் விட்டார்" யோ. 11:33-35.

(7-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

1. தினந்தோறும் ஜெபியுங்கள், மாதந்தோறும் தாங்குங்கள்.
2. மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.
3. அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகை யில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த **உதாரத்துவமாய்** கொடுத்தார்கள் 2 கொரி. 8:2.

"**உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்"** 2 கொரி.9:7.

- **கடிதங்கள், மணியாடர்கள்** அனுப்ப வேண்டிய முகவரி: **வருகையின் தூதன்,** நியுபோர்ட் தெரு, நாகர்கோவில்-629 001
  VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
  Mobile: 95432 21008, 9489740295, **e-mail:**varukayinthoothan@hotmail.com
- **காசோலை** *(Cheque & Draft)*
  வெஸ்லி தேவதாசன் என்ற பெயருக்கு மட்டும் அனுப்பும்படி அன்பாய் கேட்கிறேன்.
- **வங்கி** வழியாய் காணிக்கை அனுப்புவோர் **(Net Banking)** தயவாய் உடனே எங்களுக்கு **SMS** அனுப்புங்கள், அல்லது அலுவலக செல் நம்பர் **95432 21008** வழியாக தெரிவியுங்கள்.

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0000033**

(1-ம் பக்க தொடர்ச்சி)

வருவார். அன்பர்களும் நண்பர்களும் கைவிட்டாலும் நீண்டதும் இருண்டதுமான பள்ளத்தாக்கைக் கடந்து சென்று கொண்டிருந்தாலும் நல்ல மேய்ப்பராகிய இயேசு நம்மோடிருப்பார். குழிகளுக்குள் நாம் விழுந்துவிடாமலும் சத்துருவின் கையில் அகப்படாமலும் பாதுகாப்பார்.

பாடுபடும் வேளைகளில்

நாம் பாடுபடும் நேரங்கள் ஆண்டவராகிய இயேசுவை அறிந்து கொள்ள வாய்ப்பாக அமைகின்றன. வெளி.3:8-11 வசனங்களில் குறிப்பிடப்படுவது போல சிமிர்னா சபைக்கு சொல்லப்பட்ட பாடுகள் தேவ பிள்ளைகளுக்கு வரலாம். சிலுவை சுமப்பது அவசியம். பாடுகள், அநீதிகள், இழிவுகள், கசப்புகள் ஆகிய சிலுவைகளைக் கோடிக் கணக்கான பக்தர்கள் மிதித்துச் சென்று அவற்றை ராஜபாதையாக மாற்றியுள்ளனர். ஒரு பக்தன், "ஜீவனுக்கும் உள்ளான சமாதானத்திற்கும் சிலுவையைத் தவிர வேறு பாதை எதுவுமில்லை" என்று குறிப்பிடுகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுலைப் போல பாடுகளையும் வேதனைகளையும் அனுபவித்தவர்கள் ஒரு சிலரே. "..... இந்நாள் வரைக்கும் உலகத்தின் குப்பையைப் போலவும் எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப் போலவுமானோம்". 1 கொரி.4:13 என்பது அவரது அனுபவம். கிறிஸ்துவின் மரணத்தை அவர் எப்போதும் தரித்துக் கொண்டிருந்தார். வறுமை, கொடுமைகள், சுகவீனம், யூத மக்களின் பகைமை ஆகியவை அவர் மறுபடியும் மறுபடியும் கடந்து செல்ல அழைக்கப்பட்ட ஆழமான தண்ணீராயிருந்தது. ஆனால் இவை எல்லாவற்றிலும் தாம் நேசித்த ஆண்டவரால் முற்றிலும் ஜெயம் கொள்ளுகிறவராயிருந்தார். அவர் கிறிஸ்துவோடு கூட பாடுபட்டார். கிறிஸ்துவும் அவரோடு கூட பாடுபட்டார். கிறிஸ்து அவரோடு இருந்தபடியால் யார் எனக்கு எதிர்த்து நிற்க முடியும்? என்று சவால் விடக்கூடிய வராயிருந்தார். தெய்வீகத் தன்னம்பிக்கை அவரது ஆவியில் நிரம்பியிருந்தபடியால் தேவ அன்பிலிருந்து எதுவும் அவரைப் பிரிக்க முடியாதென்று நிச்சயித்திருந்தார்.

பாடுகள் வேதனைகளைக் குறித்த பயம் வேண்டாம். இருண்ட பாதை வழியாக தேவன் நடத்தும் போது திகைக்க வேண்டாம். சாதாரண வெப்பத்தை விட ஏழு மடங்கு வெப்பமான சூளையிலும் அவர் நம்மோடு நடப்பார்.

மிகக்கொடிய சரீர பாடுகள் கொடுக்கப்பட்டாலும் வெற்றி பெறுகிறவர்களின் தலையில் ஜீவ கிரீடத்தை அணிய இயேசு ஆவலோடு காத்து நிற்கிறார். பாடுகளைக் குறித்து முறுமுறுக்கவோ குறைகூறவோ வேண்டாம். மனிதர் இரக்கம் காட்டவில்லையே என்ற வேதனை வேண்டாம். தெய்வீக அன்பை மக்கள் குறைகூற இடமளிக்க வேண்டாம். அவரது வல்லமை இன்னும் அதிகமாக அவர் நம்மீது நம்பிக்கை வைத்திருப்பதால் பெலவீனங்களிலும் மகிழ்ந்து களிகூருவோம். "மரண பரியந்தம் உணமையாயிரு". ஆண்டவர் மரணத்தின் வழியாகவே பரிபூரண வாழ்வுக்குக் கடந்து சென்றார். நாமும் அவரையே பின்பற்றுவோம்.

திரள்கூட்டமான நோயாளிகள் கலிலேயாவின் சுற்றுப்புறங்களிலிருந்தெல்லாம் ஆண்டவராகிய இயேசுவிடம் கொண்டு வரப்பட்டனர். அவரது சுகமளிக்கும் வல்லமை அவர்களில் வெளிப்படும் வாய்ப்பைப் பெற்றனர். குஷ்டரோகிகள் அவரது பரிசுத்தத்தைக் கண்டனர். திமிர்வாதக்காரனுக்கு அவரது பெலன் வெளிப்பட்டது. மரித்த வர்களுக்குள் ஜீவன் பாய்ந்தது. எனவே ஒவ்வொரு விதமான பாடுகளும் அவர் நமது வாழ்வின் ஒரு பகுதியில் தமது வல்லமையை வெளிப்படுத்த ஏதுவாகிறது. அவரது வல்லமை மிக மிக மேலானது.

தாகமுள்ள காலங்களில்

தாகம் நிறைந்த காலங்கள் இயேசுவைக் குறித்த நெருக்கமான அறிவைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை அளிக்கின்றன. "தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவ தண்ணீர் ஊற்றில் இலவசமாய் கொடுப்பேன்" வெளி.21:6. சமாரியப் பெண் தாகத்தால் கிணற்றண்டைக்கு வராதிருந்தால் அந்த விசேஷித்த மத்தியான வேளையின் ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்க முடியாது. ஆத்தும தாகம் இருந்தால் மட்டுமே ஆண்டவரைத் தாகந்தீர்த்து திருப்திப்படுத்துகிறவராக அறிந்துகொள்ள முடியும். "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது" சங்.42:1. இது தாவீது தனது தாகத்தை வெளிப்படுத்தும் வசனம். நம்மை நாமே திருப்திப்படுத்திக் கொள்ளுகிறவர்களாயிருந்தால் கிறிஸ்துவின் தன்மையை நாம் அறிய முடியாது. நமக்குத் தாகமும் பசியும் வேண்டும். தேவன் ஜீவிக்கிறார். அவர் நமது தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்யக் கூடியவர்.

நம்மிலுள்ள சுயதிருப்தி மறைய வேண்டும். கிறிஸ்துவைப் புறக்கணித்து விட்டு நம்மை நாமே திருப்திப்படுத்துவது தவறு. நமது உள்ளம் விசாலமடைய வேண்டும். அவர் மேலுள்ள தாகம் பெருக வேண்டும். அவர் எல்லாவற்றிற்கும் போதுமானவர் என்பதை இன்னும் அதிகம் அதிகமாக அறியப் பிரயாசப்படுவோம். அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்.

தாகம் நிறைந்த காலங்கள் இயேசுவைக் குறித்த நெருக்கமான அறிவைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை அளிக்கின்றன

தேவனுக்குக் காத்திருத்தல்

Waiting upon God

John Wright Follette (1883-1966)

"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுபெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்" ஏசா.40:31.

இது ஒரு பிரபலமான வாக்குத்தத்தம். நாம் சோர்ந்துபோகும் வேளைகளில் இதனைக்கூறி ஆறுதலும் பெலனும் பெற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம். ஆயினும் இந்த வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதம் நமது வாழ்வில் சாதாரணமாகப் பெறப்படவில்லை. நாம் ஓடும்போது களைப்படைந்து நடக்கும் போது சோர்வடைகிறோம்.

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள்

நான்குவிதமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள ஒரு நிபந்தனை இது. எந்த வயதிலும் சூழலிலும் ஆசீர்வாதங்களைப் பெற வேண்டுமானால் காத்திருப்பது அவசியம். அனைத்து மக்களும் பிரசங்கிக்கவும், போதிக்கவும், மிஷனெரி களங்களுக்குச் சென்று பணியாற்றவும், பொதுச் சேவை செய்யவும் கூடாது. ஆனால் காத்திருப்பது அனைவருக்கும் சாத்தியமானது.

நான்கு ஆசீர்வாதங்களையும் வாக்குக் கொடுப்பது மனிதனல்ல. அவர் தேவன். மனிதன் நிறைவேற்றுவதில் பெலவீனன். இது பரலோகத்தின் தேவனுடைய வாக்கு. எனவே அது தூய்மையானதும் மாறாததுமாயிருக்கிறது.

காத்திருப்பது நம்மைச் சார்ந்தது. இந்த ஒரே நிபந்தனைக்குரிய ஆசீர்வாதங்கள் நிச்சயம். ஆக நாம் ஆசீர்வாதங்களைப் பெறாமலிருக்க ஒன்றில் காத்திருக்கவில்லை. அல்லது அதன் பொருளைப் புரிந்து கொள்ளவில்லை.

வேத புத்தகத்தின் அடிப்படையில் காத்திருப்பது எப்படி?

1. அமைதி

முதலாவது அமைதி அல்லது அமரிக்கை அவசியம். ஜெபம் ஏறெடுக்கப்பட்ட பின்பு ஆத்துமா அமைதியோடு தலைகுனிந்து தேவனுக்கு முன்பாகக் காத்திருக்க வேண்டும். சங்கீதக்காரன் இதன் பொருளை இவ்வாறு விளக்குகிறார். "தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது; அவரால் என் இரட்சிப்பு வரும். ..... என் ஆத்துமாவே தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் நம்புகிறது அவராலே வரும்" சங்.62:1,5.

பெரிய சோதனையில் அவர் ஜெபத்தின் மூலம் ஆறுதல் பெற்று, இருதயம் உற்சாகமடைய தேவ உதவி அவருக்கு நம்பிக்கை அளித்தது. தொடர்ந்து அமைதியாக விசுவாசத்தால்

(4-ம் பக்கம் பார்க்க)

கடின வியாதியும் தொடர்ந்து மரணமும் ஏற்பட்டிராவிட்டால் லாசருவின் சகோதரிகள் ஆண்டவரின் உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிந்திருக்க முடியாது.

(3-ம் பக்க தொடர்ச்சி)
தன்னை தேவனிடம் ஒப்படைக்கிறார். இந்தக் காத்திருக்குதல் பரலோக பனித்துளி வடிகட்டப்பட்டு நோய் கொண்ட நமது இருதயங்களில் பாய்ந்து வருவது போலிருக்கிறது.

சுறுசுறுப்பாகவும் விரைவாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் நாமிருக்கிறோம். இந்நிலை நமது ஆவிக்குரிய வாழ்வை அதிக அளவில் பாதித்து, அதன் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்துகிறது. ஆத்துமா அமைதலற்றுப் போகிறது. ஜெப வாழ்வு பெலவீனமடைகிறது. இருதயம் கவலையாலும் பாரத்தாலும் நிறைந்து விடுகிறது. எனவே கிருபாசனத்தண்டை சேர்ந்து நமது விண்ணப்பங்களை அதிகநேரம் ஏறெடுக்கிறோம். பலவேளைகளில் ஜெபித்துவிட்டு வேகம் வேகமாக அவர் சமூகத்தைவிட்டு வெளியேறுகிறோம். நமது முயற்சியால் ஜெபத்திற்குப் பதில் கிடைப்பதாக எண்ணிக்கொள்கிறோம். ஆனால் அமைதியாகக் காத்திருப்பதில்லை.

தேவனுக்கு முன்பாக அவர் சமூகத்தில் அமைதியாய் சற்று நேரம் உட்கார்ந்திருப்பது காலத்தை வீணாக்குவதல்ல. ஏற்கெனவே அவர் அறிந்திருக்கிற நமது தேவைகளை நாம் மறுபடியும் மறுபடியும் சொல்லிக் கொண்டேயிருப்பதை தேவன் விரும்புவதில்லை. நமது பார்வை அவரையே மையமாகக் கொண்டிருக்க வேண்டும். உள்ளம் அடக்கத்துடனிருக்க வேண்டும். இதயம் அமரிக்கையாயிருக்க வேண்டும். **ஜெபம் நமது தேவைகளை தேவனிடம் சுமந்து செல்லும் செட்டையாக இருக்கிறது. ஆனால் அற்புதங்கள் நிகழ அமைதியாக அவரது பிரசன்னத்தில் காத்திருக்க வேண்டும்.**

2. எதிர்பார்ப்பும் நம்பிக்கையும்

தேவனுக்குக் காத்திருப்பது என்பது தேவனை எதிர்பார்த்திருப்பதாகும். இது அவரைச் சார்ந்திருப்பதைக் குறிக்கும். இயற்கையாக மனிதன் சுயதிருப்தியுடையவன். அவன் சுற்றிலும் திரும்பிப் பார்த்து தன் சொந்தத் திறமை, நண்பர்கள், சூழ்நிலைகள் முதலியவற்றிலிருந்து உதவியை நாடுகிறான். இயற்கையாக மனிதன் தனக்குத்தானே உதவியாயிருக்கவும், பிறரைச் சாராமலிருக்கவும் தருணங்களுண்டு. ஆனால் ஆவிக்குரிய வாழ்வில் நாம் சுயத்தை நம்பாமல் தூய ஆவியானவரின் மேல் சார்ந்து வாழவும் கற்பிக்கப்படுகிறோம்.

நாம் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்ற ஆரம்ப காலங்களில் தேவ ஒத்தாசை முற்றிலும் தேவை என்று உணர்ந்திருக்கலாம். அந்தப் புதிய வாழ்வைக் காத்துக்கொள்ள எல்லாவற்றிற்கும் அவரையே சார்ந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்துடனிருக்கிறோமா? "என் மாம்சத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லை என்று நான் அறிந்திருக்கிறேன்" ரோமர்.7:18 என்பது பவுலின் அனுபவம். கிறிஸ்துவின் வார்த்தைகளும் இதை உறுதிப்படுத்துகின்றன. "நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை" யோ.5:30. நிச்சயமாகவே தேவனிடத்திலிருந்து தான் நாம் எல்லாவற்றையும் எதிர்பார்க்க வேண்டும். அவரது வழி முறைகள் வித்தியாசமானவைகள். நாம் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தால் அவர் நம்மைப் பொறுமையாய் நடத்துவார். அப்பொழுது நாம் சங்கீதக்காரனுடன் சேர்ந்து "என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு, நான் நம்புகிறது அவராலே வரும்" சங்.62:5 என்று பாட முடியும்.

"கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு" சங்.27:14. தாவீது நெருக்கப்பட்டு, அதைரியப்பட்டுப் போன வேளையில், தனது முயற்சிகளைக் கைவிட்டு, தனது பலவீனத்தை உணர்ந்து வெற்றியுள்ள விசுவாசத்துடன், இதயப்பூர்வமாக தேவனைக் குறித்து, "நான் நம்புகிறது அவராலே வரும்" என்கிறார்.

3. விழித்திரு

நமது ஆவிக்குரிய புலன்கள் ஜாக்கிரதையுடனும், எதிர்பார்ப்புடனுமிருக்க வேண்டும் என்பதுதான் விழித்திருப்பது. நாம் அவருக்கு மிக அருகாமையில் அமரிக்கையுடன் இருப்பதன் மூலம் அவர் அளிக்கும் எந்த மெல்லிய குரலின் செய்தியையும் உடனுக்குடன் நாம் அறிய முடியும். அவரது சத்தத்தை விரைவாக பகுத்தறியும் உணர்வுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். நீதி.8:34-ல் இது தெளிவாக கூறப்படுகிறது. "என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து எனக்குச் செவி கொடுக்கிற மனுஷன் பாக்கியவான்".

ஒரு வேலையாள், போர்வீரன் அல்லது காவலாளி வாசலருகே காத்து நிற்கும் காட்சி இங்கே தரப்படுகிறது. தனது எஜமான் எப்போது வாசலண்டை வந்து சேவைக்காக அழைப்பான் என்பதை அவன் அறியமாட்டான். அவன் அறிந்திருப்பது அவனது கடமையாகிய கவனத்துடன் காத்துக் கொண்டு விழித்திருப்பது மட்டுமே. அவன் சோம்பலாகவோ சொப்பனங் காண்கிறவனாகவோ இருக்கக்கூடாது. தனது பணிக்கு ஆயத்தமாக அமைதியுடன் காத்திருக்க வேண்டும்.

தேவன் ஏதோ நம்மிடம் பேசுவதற்கு முன்னால் அவரது நடபடிகளை நாம் கூர்மையாகவும், அதிகமாகவும் கவனிப்பதில்லை. நாம் அவருக்காகப் போகவோ, வரவோ, பணி செய்யவோ, பேசவோ, எழுதவோ, ஜெபிக்கவோ, ஒருவரை சந்திக்கவோ, பாடவோ, கட்டளையிடலாம். ஏனெனில் நாம் அவருடைய இருதயத்திற்கு மிக அருகிலிருக்கிறோம். சேவை மூலம் நாம் இன்னும் அவருடன் அதிக ஐக்கியம் கொள்ள முடிகிறது.

ஆனால் இன்று அநேகர் தேவனுடைய நடபடிகளை அறியக் கூடாமலிருக்கிறார்கள். காரணம் அவர்கள் அதை கவனிக்கும் அளவுக்கு அவரது அருகிலோ அல்லது அமைதலுடனோ இருக்கவில்லை. நாமோ அவருடைய கரம் நீட்டப்பட்டிருப்பதைக் காண்கிறோம். நமது இருதயங்களில் ஒரு பரிசுத்தமான எதிர்வினை அல்லது தூண்டுதல் ஏற்படுகிறது. தேவன் உயிரோடெழுந்தவர். நமது மீட்பு சமீபமாயிருக்கிறது.

நாம் காத்திருக்கிறோமா?

காத்திருப்பதால் கிடைக்கும் ஆசீர்வாதங்களை அறிந்திருக்கிற நாம் காத்திருக்கிறோமா? தேவனுக்கு முன்பாக அமரிக்கையாயிருக்கிறோமா? நமது எதிர்பார்ப்புகள் அவரிடமிருக்கிறதா அல்லது நம்மிலும், நண்பர்களிலும் சூழ்நிலைகளிலுமிருக்கிறதா? சேவை செய்யும்படியாக அவரது கட்டளைக்குக் காத்திருக்கிறோமா? நமது இருதயம் எதிர்பார்ப்புடன் அமைதலாகவும் பொறுமையாகவும் அவரது கட்டளைக்குக் காத்திருக்கிறதா?

காத்திருப்பதின் ஆசீர்வாதங்கள்

1. அவர்கள் புதுபெலன் அடைவார்கள்

புதுபெலனடைவது என்பது பெலனை மாற்றிக்கொள்வதாகும். நமது உடையை இன்னொருவருடன் மாற்றிக் கொள்வது போன்ற பொருளை இது தருகிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் நமது சுயபெலனை விட்டுவிட்டு, தேவன் தமது பெலத்தால் நம்மை இடைகட்ட இடமளிக்க வேண்டும்.

2. அவர்கள் கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள்

கழுகு விசேஷித்த தன்மைகளை உடைய பறவை. அது அதிக உயரத்தில் பறக்கக்கூடியதும் அங்கு தாபரிக்கக் கூடியதுமாகும். நாம் பரலோகத்தின் உன்னதங்களில் கிறிஸ்துவோடு உட்கார தேவன் எதிர்பார்க்கிறார். புது சிருஷ்டிகளாகிய நாம் அங்கு வாழ நம்மை அழைத்திருக்கிறார். நாம் பரலோக வாசிகள், நமது விருப்பங்களெல்லாம் மேலானவைகள். நாம் ஆவியானவரில் நம்பிக்கை வைத்து, உயர்தலங்களில் அவர் நம்மை வைத்துக் கொள்ள அவரைப் பற்றிப் பிடித்துக் கொள்வோம். அங்கு வாழும்போது நமது பார்வை வேறுபடுகிறது. சூழ்நிலைகளைத் தெளிவாகக் கழுகைப் போல பார்க்க முடியும். நமது இருதயங்கள் முழுமையானவைகளை மட்டும் சிந்திக்கும். விசுவாசத்தில் முன்னேறுவோம். பூமிக்குரிய கண்ணோட்டத்தில் எதையும் பார்க்கமாட்டோம். சிறகுகளை அடித்துக்கொண்டு மகிழ்வுடன் வாயு மண்டலத்திற்கு மேலான உயர்வில் வாழுவோம்.

கழுகினுடைய தொடர்பு மேன்மையானவைகளோடு காணப்படுகிறது. மலைகள், ஆற்றுப்படுக்கை, மிகப்பெரியதும் ஆழமுமான பள்ளத்தாக்குகள், மிக உயர்ந்த சிகரங்கள் போன்றவை அதற்குச் சாமான்யமானவை. உலக மனிதருடைய வாழ்வை விட கிறிஸ்தவனுடைய வாழ்வு மிகவும் மேன்மையான தொடர்புகளை உடையது. தேவன் நமக்கு அளவில்லாத வாய்ப்புகளைத் திறந்தளித்திருக்கிறார். தூய ஆவியான

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

வர் தாமே இத்தகைய வாழ்வின் மதிப்பு, அற்புதம் ஆகியவற்றை நாம் இன்னும் அதிகமாக உணரச் செய்வாராக. பழைய சிருஷ்டியின் பெருமை நம்மில் நுழையாமல், தாழ்மை நம்மில் பிரவேசிக்கட்டும். நமது இருதயங்கள் அர்ப்பணிக்கப்பட்டு, தேவன் வாசம் செய்யக்கூடியதும் அவர் விரும்புவதுமான தெய்வீக குணநலன்கள் அதில் இடம்பெறட்டும். தேவன் தாமே நமது பார்வையை விசாலமாக்கி அவரது இரகசியத் திட்டங்களால் நிரப்புவாராக. அப்போது சிறியதும் முக்கியமற்றதுமான காரியங்களுக்கு நாம் வாழ்வில் இடமளிக்க மாட்டோம்.

கழுகை நாம் அடிக்கடி பார்க்க முடியாது. அது சாதாரணமான பறவையல்ல. எல்லாப் பறவைகளிலும் அது தனித்தன்மையுடையது. தேவனோடு நடக்கிறவர்கள் தேவனுடைய நன்மைகளை உணரக்கூடிய தனிப்பட்ட தன்மையுடையவர்கள். ஆபிரகாம் தேவனோடு தனியாக உயரமான இடங்களில் நின்றான். மோசே எகிப்தின் சகல வித்தைகளைக் கற்றறிந்த போதிலும் நாற்பது ஆண்டுகள் தேவனோடு வனாந்தர வாழ்வில் ஈடுபட வேண்டியதாயிருந்தது. பவுல் கிரேக்க ஞானம் நிறைந்த வனாகவும், கமாலியேலின் பாதத்தில் கற்றுத் தேறினவனாகவுமிருந்தாலும் அரபிய பாலைவனங்களில் தேவனோடு நடந்து கற்றுக் கொள்ள வேண்டியதுமிருந்தது.

ஒரு தனிமை அல்லது பிரிவின் அனுபவத்தைத் தந்து, சூழ்நிலைகளை நமக்காக தேவன் வடிவமைத்துத் தருகிறவர். அவர் கரத்தில் நாம் நம்மை ஒப்புவித்து விடும் போது ஏதோ ஒரு முறையில் அவர் செயல்பட்டு, நம்மிடத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகிறவர் அவர். அப்போது நமது சிறகுகள் ஆகாய மண்டலத்தின் மேல் பறக்கும் அனுபவத்தைப் பெறுவோம். தனிமையின் அனுபவம் நமக்கு அமைதியைத் தருகிறது. காணப்படாத தேவனால் நம் வாழ்வு பலப்படுத்தப்படுகிறது. அப்போது தேவனை நம்பி, எந்தச் சூழலிலும் ஆவியை அடக்கி ஆள முடியும். கிறிஸ்து தமது வாழ்வில் காண்பித்த மேலான அமைதி அடக்கம் ஆகியவை இதற்கு உதாரணமாகும்.

மூன்றாம் நான்காம் ஆசீர்வாதங்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள் என்பதாகும். மனித ஒழுங்கின்படி முதலாவது நடப்பதும், பின்பு ஓடுவதும், தொடர்ந்து பறப்பதும் இயற்கை நியதிகள். ஆனால் முற்பிதாக்களின் வரலாற்றைப் படிக்கும் போது ஓட்டத்தை ஆரம்பித்து சோர்பின்றி நடந்து மேலோகம் பறந்து சென்று நித்தியத்தில் சேர்ந்து கொண்டனர். அந்த வாழ்வுக்கு இவ்வுலக வாழ்வு சேவை மையமாயிருந்தது.

உனக்கு எதிராகக் கதவைப் பூட்டிவிட்டு அன்பான இயேசுவைக் கூப்பிடு. அவர் அருகிலிருக்கும் போது எதுவுமே கடின மாய் தோன்றுவதில்லை.

சர்வ வல்லவரோடு இணைந்த விசுவாசம்

Faith linked to Omnipotence

T. Stuart Holden (1870-1934)

வேதபகுதி : ஆபகூக் அதிகாரங்கள் *1-3*

"அத்திமரம் துளிர்விடாமற் போனாலும் .... நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்; என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்" ஆப.*3:17-18.*

ஆபகூக் நம்மைப் போலவே பாடுகளை அனுபவித்திருக்கிறார். அவர் ஆஸ்தியை நாடவில்லை. மக்கள் பட்டினியாயிருந்தபோது அவர் சம்பிரமமாய்ச் சாப்பிடவில்லை. அவருடைய விசுவாசம் உன்னத தேவனிடமிருந்தது. தீமையான காரியங்கள் எத்தனை காலம் இவ்வாறு தொடரும் என்று அவர் தேவனிடம் பேசினார்.

விசுவாசத்தின் அடித்தளம்

இத்தனை துன்பங்களுக்கிடையில் சந்தோஷமாயிருப்பது எளிதல்ல. முதலாவது அவர் எதிர்மறையான ஒன்றைச் செய்தார். எதிரிகளான கல்தேயர் சரிப்படுத்தப்பட்டு பயன் படுத்தப்பட வேண்டியவர்கள் எனக் கண்டு கொண்டார்.

தேவனிடம் தொடர்பு கொண்ட அவர் தாம் சரியான பாதையிலிருப்பதை உணர்ந்தார். அவரிடமிருந்த தேவபயம் அவரது வலிமையைக் காட்டிலும் மேலானதாயிருந்தது. தனது கேள்விக்கு விடை வேண்டும் என்றும் அது தனது வாழ்விற்கு உறுதியான தளமாக வேண்டுமென்றும் எண்ணினார். தேவனை சேவித்து, அவரை வெளிப் படுத்துவது தனக்கும் தேசத்திற்கும் நலமானது எனக் கண்டுகொண்டார்.

எனவே இந்த தீர்க்கதரிசனம் தேவனுக்கு நேராக அவர் ஏறெடுத்த அழுகையின் பதிவேடாக இருக்கிறது. அவர் தேவனை உறுதியாக பிடித்துக் கொண்டார். ஜெபம் என்பது அதை ஏறெடுக்கிறவர்களுடையதாயிருந்தாலும் அது தேவனுக்கும் சொந்தமானது. அது ஆழங்களிலிருந்து ஏறெடுக்கப்பட்டு உன்னதங்களை எட்டக்கூடியது.

ஒரு இருதயத்திலிருந்து இன்னொரு இருதயத்திற்கு ஏறெடுக்கப்படும் ஜெபம் பலன் தருகிறது. இது நேர் கோட்டில் செல்வதால் தூரம் குறைவானது. இரு புள்ளிகளை இணைக்கிறது. ஆபகூக் ஏறெடுத்த ஜெபம் அவரையும் அவரோடு தேசத்தையும் உயர்த்தியது. அது வெறும் வார்த்தைகளாலானதல்ல, அது தேவனுக்கு முன்பாக செயல்படும் நேர்மறையான மனநிலை.

ஆபகூக் காவற்கோபுரத்திலிருந்து கொண்டே தேசத்தில் நடைபெறும் பயங்கரமான காரியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். அனைவருக்கும் அது தெளிவான காட்சி. ஆனால் அவர் மிகுந்த மன வேதனையுடன், "ஆண்ட வரே, நீர் உம்மை வெளிப்படுத்தி இந்தக் குழப்பமான நிலைக்கு விளக்கம் தராவிட்டால் உம்மிலுள்ள விசுவாசம் மறைந்து போகுமே" என்று கதறுகிறார். இப்படி ஜெபிக்கும்போது என்ன நடக்கிறது.

தேவன் அவரோடு பேசினார். அந்தகாரத்தைத் தொடர்ந்து வெளிச்சம் வந்தது. தேவன் கல்தேயருக்குச் சரிக்கட்டுவதாகக் கூறிவிட்டார். அதற்கு முன் இஸ்ரவேலில் அவர் தமது திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். எல்லாவற்றிலும் தமது மகிமையை வெளிப்படுத்துவதே அவரது நோக்கம் என்பதைத் தெரிவிக்கிறார். தமது ஜனத்தைக் குறித்துக் கவலையற்றவராக இருக்கவில்லை என்பதையும் தீர்க்கனுக்கு நிச்சயப்படுத்துகிறார்.

இதற்குப் பின் ஆபகூக் மறு உறுதி பெற்றவராகவும் மறு தூண்டுதல் பெற்றவராகவும் ஜனங்களுக்கு முன்பாக நின்று தனது விசுவாசத்தை அறிக்கையிடுகிறார். உண்மைகளை சந்தித்த அவர் அவற்றின் மத்தியில் தேவனைக் கண்டுகொண்டார், எனவே அவருக்கு எந்த பயமுமில்லை.

சூழ்நிலைகள் ஒருவரில் நற் பண்புகளையும், பெலனையும், நல்லொழுக்கத்தையும் உருவாக்க தேவன் பயன் படுத்தும் கச்சாப்பொருட்கள் என்று கூறலாம். இவரைப்போல தைரியமாக விசுவாசத்தை வெளிப்படுத்தியவர்கள் எவரும் அங்கில்லை. அழிவுக்குரிய பகுதிகள் எல்லாம் மக்களிடமிருந்து நீக்கப்பட்ட பின்புதான் அவர், எல்லா நிலையிலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் என்கிறார்.

தேவன் பயன்படுத்திய ஒருவர் எவ்வளவு அதிகமாக அவரைத் துதித்தார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. அவர் மதிப்புக்குரிய ஒரு தீர்க்கர். அன்றைய சூழ்நிலையில் பயன் படுத்தப்பட்ட அத்திமரம், திராட்சச் செடி, ஒலிவமரம், ஆட்டுமந்தைகள், மாடுகள் போன்றவற்றிற்குப் பதிலாக வங்கிக் கணக்குகள், வியாபாரங்கள், பங்குச் சந்தைகள் போன்றவற்றை பயன் படுத்தலாம். கல்தேயரின் முற்றுகைக்கு பதிலாக உலகில் இன்று நிலவிவரும் கொள்ளை நோய்கள், குழப்பங்கள் ஆகியவற்றை எடுத்துக்கொள்ளலாம். வங்கியில் பணம் இல்லாமற்போனாலும், வியாபாரம் நஷ்டமடைந்தாலும், தரித்திர நிலைக்கு வரவேண்டியதாக இருந்தாலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கிறோமா?

தேவ ஒத்தாசையின்றி யாரும் அப்படி மகிழ்ச்சியாய் இருக்கமுடியாது. ஆபகூக்கின் வாழ்வு தேவனோடு இணைந்திருந்தது. தேவ உத்தாசையால் மட்டுமே மனிதன் தேவதிட்டத்தை முற்றிலும் நிறைவேற்ற வலிமைபெறும் என்பதற்கு ஆபகூக் சாட்சி.

தேவனை நாம் இழந்துவிடாவிட்டால் நமக்கு எந்த ஒரு இழப்பு மில்லை என்பது ஆபகூக்கின் வாழ்வில் தெளிவுபடுகிறது. எந்த மோசமான சூழ்நிலையையும் சகிக்க பெலன் தருவது தேவன்.

எனவே முதலாவது உங்கள் வழிகளையும், தேவன் மேலுள்ள விசுவாசத்தையும் புதுப்பித்துக் கொள்ளுங்கள். அவரது அறிவு உங்களில் வளரட்டும்.

வாழ்வுக்கும் சேவைக்குமான தெய்வீக பெலன்

Divine strength for life and service

Alexander Mac Laren

"நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன், அவர் என் கால்களை மான்கால்களைப் போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப் பண்ணுவார்" ஆப.3:18,19.

இரட்சிப்பின் தேவனில் களிகூர மூன்று வழிகள்

1. தேவனோடுள்ள உறவு மனிதனுக்கு பெலனைக் கொடுக்கிறது

'கர்த்தர் என் பெலன்'. அவர் அதை தருவதோடு நிறுத்திவிடுவதில்லை. ஒரு பிச்சைக்காரன் ஒரு நாணயத்தைப் பிச்சையாகப் பெற்றுவிட்டு கொடுத்தவனை விட்டுத் தூரமாக நிற்கிறான். ஆனால் கர்த்தர் நமது பெலன், அவர் நம்முடனேயே இருக்கிறார்.

பவுல் "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" பிலி.4:13 என்கிறார். மேலும் "என் கிருபை உனக்குப் போதும், உன் பலவீனத்திலே என் பெலன் பூரணமாய் விளங்கும்" 2 கொரி.12:9 என்று கர்த்தருடைய வாக்குறுதியைப் பெற்றார்.

இந்த உயரியதும் ஆச்சரியமுமான நிரம்பிவழியும் வல்லமையைத் தவறவிட வேண்டாம். இது நமக்குச் சொந்தம். அதைக் கண்திறந்து பார்த்து, இருதயத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். இது சுவிசேஷத்தின் மத்திபமான ஆசீர்வாதம். இந்த நம்பிக்கையுடன்தான் ஆபகூக் "நான் கர்த்தரில் மகிழ்ச்சியாயிருப்பேன்" எனக் கூறினார். நாமும் இவ்வாறு சொல்லும் தகுதி பெற்றால் ஆபகூக்கைக் காட்டிலும் மேலான அனுபவங்களைப் பெறலாம். "கர்த்தராகிய யேகோவா என் பெலனும், என் கீதமுமானவர்; அவரே எனக்கு இரட்சிப்புமானவர்" ஏசா.12:2.

2. தேவனோடுள்ள உறவு ஜீவபாதையில் இலகுவைத் தரும்:

"அவர் என் கால்களை மான் கால்களைப் போலாக்கி ....." மானின் கால்கள் சுருள்வில் (spring) போல் எளிதில் துள்ளிச் செல்ல உதவும். அவை பாரமற்றவைகளும் வேகமாய்த் துள்ளி ஓடக் கூடிய அமைப்பும் உடையவை. சதுப்பு நிலமானாலும் எந்த தடைகளிருந்தாலும் அவைகளை தாண்டி வேகமாக செல்லக் கூடியவை. "அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப் போலாக்கி, என்னுடைய உயர்தலங்களில் என்னை நிறுத்துகிறார்" சங்.18:33 என்று சங்கீதக்காரன் பாடுகிறார். அதன் கால்கள் வேகத்தை குறிக்கின்றன.

நாம் எப்படி முன்னேறிச் செல்லுகிறோம்? உற்சாகமின்றி ஒவ்வொரு அடியும் பாரத்தோடு தூக்கி வைத்து முன்னேறுகிறோமா? உழவன் உழுது கொண்டிருக்கும் நிலத்தின் படைக்கால்களிலுள்ள சகதி இரு கால்களிலும் ஒட்டிக்கொள்ள, அவன் வேகமாக நடக்க முடியாமலிருப்பது போலவும், வேலை செய்து வீடு திரும்புகிறவன் களைப்புடன் காலெடுத்து வைத்து நடப்பது போலவும் நமது நடை இருக்கிறதா? வழக்கமான செயல்பாடுகளும், ஆவியில் ஏற்படும் தடுமாற்றமும், சந்திக்கவிருக்கும் கடின ரஸ்தாக்களும் குறைந்து வரும் உற்சாகமும் நடையின் வேகத்தைக் குறைக்கின்றன. ஆனால் நமக்கு முன்னாலிருக்கும் ஓட்டத்தை ஓட மானுடைய கால்களைப் போன்ற கால்கள் அவசியம்.

இந்தப் பாதையில் செல்ல ஆயத்தமுள்ளவர்களாகவும் பெலனுள்ளவர்களாகவும், மகிழ்ச்சியுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். கடினங்களை உதாசீனம் பண்ண வேண்டும். தேவனோடுள்ள உறவுதான் சத்துவத்தையும், புத்துணர்ச்சியையும், மகிழ்ச்சியையும் மனிதனுக்கு அளிக்கிறது. இவற்றை மனிதரிடமிருந்தோ, இயற்கையிலிருந்தோ, சூழ்நிலைகள் மூலமாகவோ பெறமுடியாது.

தேவனோடுள்ள உறவு ஏற்பட தெய்வீக வல்லமை நமது இருதயத்தில் பாய்ந்து வர அதைத் திறந்தளிக்க வேண்டும். அப்போது புதிய நோக்கங்களையும், பணிகளையும் சகிப்புடன் செயல்படுத்த முடியும். பணிகள் பளுவாகவோ சலிப்பூட்டுவதாகவோ, அற்பமானதாகவோ தெரிவதில்லை. அவை ஒரே மாதிரியாகவோ பொறுமையை சோதிப்பதாகவோ தென்படுவதில்லை. ஆனால் கிறிஸ்துவின் உறவின்றி செய்யப்படும் பணிகள் தீர்வு செய்யக் கடினமான வைகளாகவோ, நமது சக்திக்கு அப்பாற்பட்டவைகளாகவோ ஆகிவிடலாம். மேலும் காலப்போக்கில் எந்திரமயமாகவும், களைப்பூட்டுவதாகவும் மாறிவிடலாம். ஆனால் தேவனிடமுள்ள அன்பின் புதிய பார்வையைப் பெற்றுவிட்டால் அது நம் உள்ளத்தில் புதைந்து செயல்களில் வெளிப்படும். நம்மால் சமாளிக்க முடியாத எந்த ஒரு பணியும் இருப்பதில்லை. எதையும் ஏற்றுக் கொள்ளும் நிலை ஏற்படுகிறது. கரடுமுரடானவை சமமாகவும் கோணலானவை நேராகவும் ஆக்கப்படும். நமது பாதங்களில் சமாதானத்தின் சுவிசேஷம் என்னும் பாதரட்சை தரிப்பிக்கப்படும்.

நாம் அனுதினமும் தேவனோடுள்ள உறவில் நிலைத்திருப்போமானால் நமக்கு முன்னிருக்கும் ஓட்டத்தில் இறுதி பலனை முன்னிறுத்தி எல்லாவற்றையும் செய்வோம். வாழ்வு அமைதியாகவும், ஜாக்கிரதையுள்ளதாகவும் ஆசீர்வதிக்கப்பட்டதாகவுமிருக்கும். ஏனெனில் அது நித்திய ஜீவனுக்குரியது. அப்படிப்பட்டவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.

3. தேவனோடுள்ள உறவு உயர்வை தரும்:

"உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப் பண்ணுவார்". உயரமான மலைகளில் மேயும் மந்தைக்கு ஆபத்தில்லை. எந்த எதிரியும் அங்கே வரமுடியாது. மந்தையின் கால்கள் பாறை வெடிப்புகளில் உறுதிக்காகவும் தலைகள் சுத்தமான ஆகாயத்தில் அசைந்து கொண்டுமிருக்கும். சுயாதீனமும் களிப்பும் அவற்றிற்கு உண்டு. அது போலவே தேவ உறவு அனுதினமும் காத்துக் கொள்ளப்பட்டால் அத்திமரம் துளிர்விடாமற் போனாலும் ..... எந்த நிலையிலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கவும் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூரவும் முடியும். உயரமான அனுபவத்தைக் குறித்து ஏசாயா, 'கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள்' என்று குறிப்பிடுகிறார். தேவனோடுள்ள உறவு நம்மை நடக்கவும், ஓடவும் பண்ணுவது மட்டுமல்ல, பறக்கவும் செய்கிறது. இந்த உயர்வு மேல் வீட்டையும் குறிக்கும். அதை நம் சொந்த முயற்சியால் பெற முடியாது. தேவன் தமது கிருபையால் அதனை நமது தாபரமாக்குகிறார். அங்கு எந்த பயமுமில்லை. இவ்வுலகின் தூசி படிந்த ரஸ்தாக்களில் நம்மைக் கரம் பிடித்து நடத்தி பரலோகம் சேர்ப்பார். அங்கு சிறந்த பாதுகாவலுண்டு. ஆகாயம் தூய்மையானது. விஷப் பனிப்படலம் நமக்குக் கீழே தானிருக்கும். வேடனுடைய அம்புக்கும் கண்ணிக்கும் பயப்பட வேண்டியதில்லை. கீழே இறங்கினால் மட்டுமே ஆபத்து.

தேவனோடுள்ள உறவு நமது பாதையை எதிராக்குகிறது. இறுதியில் உயர் தலங்களில் நம்மைக் கொண்டு சேர்க்கிறது. இதற்கிடையில் பல பாடங்களை நாம் கற்றுக் கொள்ளவும், அயராது உழைக்கவும் இப்படி பல நிலைகளை கடந்து செல்ல வேண்டும். இறுதியில் அவரோடு பரலோகத்தில் உயர்த்தப்படுவோம். அங்கு ஆபத்தும் பயங்களுமில்லை. ஜீவ தண்ணீரால் திருப்தியடைவோம்.

மிகவும் விசேஷித்த விடுதலை

Special deliverance

1912-ம் ஆண்டு J. Stuart Holden ஒரு கிறிஸ்தவ எழுப்புதல் கூடுகையில் பிரசங்கிக்க அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்டார். எனவே லண்டனிலிருந்து நியூயார்க் செல்ல டைட்டானிக் கப்பலில் முதல் வகுப்பு சீட்டு பெற்றுக் கொண்டார். திடீரென அவரது மனைவி சுகவீனமடைந்துவிட்டார். மிகுந்த மனவேதனையுடன் பிரயாணத்தை ரத்து செய்துவிட்டு வீட்டிலிருந்து மனைவியைக் கவனிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் அவர் செல்லவிருந்த டைட்டானிக் கப்பல் உடைந்து பிரயாணிகள் மாண்டதை அவர் கேள்வியுற்றார். தேவன் தமக்குக் கொடுத்த அந்த அற்புதமான விடுதலையை குறிக்கும் படியாக அவர் பெற்றிருந்த பயணச் சீட்டை ஒரு சட்டத்தில் 'அவர் உன் ஆத்துமாவை அழிவுக்கு விலக்கி மீட்டு' சங்.103:4 என எழுதி வைத்தார்.

(2-ம் பக்க தொடர்ச்சி)

காலஞ்சென்ற எனது தகப்பனார் பாஸ்டர் **S.தேவதாசன்** அவர்கள் 1971-ம் ஆண்டு அடியேன் இரட்சிக்கப்படுவதற்கு முன்னரே **முழு இரவு ஜெபம்** ஆரம்பித்து, ஆசாரிபள்ளம் என்ற இடத்தில் நடத்தி வந்தார்கள். அவர்களது தரிசனம் **எழுப்புதல்**. அடியேனின் தரிசனமும் **எழுப்புதலே;** ஆனால் அதற்காக தேவன் **எழுப்புதலுக்காக இதய கதறல்** என்ற பெயரில் 7 மணி நேர உபவாச ஜெபத்தை நடத்தி வருவதை வாசகராகிய நீங்கள் அறிவீர்கள். தமிழ்நாடு, கேரளா எந்த மாநிலமானாலும் சபை ஊழியராகிய நீங்கள் வாஞ்சித்தால் நாங்கள் நடத்தித் தர ஆயத்தமாயிருக்கிறோம்.

எழுப்புதலுக்காக இதய கதறல் 2022
Heart cry for Revival 2022

மாதம்	தேதி	இடம்
ஜனவரி		✓
பெப்ரவரி		✓
மார்ச்		
ஏப்ரல்		
மே		
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்		
செப்டம்பர்		✓
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

Programme

9.30 - 10.00 - ஆயத்த ஜெபம்
10.00 - 10.30 - பாடல் ஆராதனை
10.30 - 11.15 - எழுப்புதல் என்றால் என்ன?
11.15 - 12.00 - ஜெபம்
12.00 - 01.00 - தரிசன செய்தி
01.00 - 02.00 - ஜெபம்
02.00 - 02.15 - தேனீர்
02.15 - 02.30 - பாடல்
02.30 - 03.30 - தேசத்திற்காக ஜெபம்
03.30 - 05.00 - இறுதி செய்தி

கர்த்தருடைய கிருபையினால் ஏற்கெனவே வருகையின் தூதன் புதிய முகவரி பட்டியல் வேலையை ஆரம்பித்து விட்டோம். எனவே தயவுசெய்து வங்கி வழியாக காணிக்கை அனுப்பினால் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நீங்கள் தெரியப்படுத்தா விட்டாலும் உங்கள் பணம் வருகையின் தூதன் வங்கி கணக்கில் சேர்ந்துவிடும்; ஆனால் உங்கள் கணக்கில் வரவு வைக்க இயலாது. ஏற்கெனவே ரூபாய் 100 முதல் 1000 வரை வங்கியில் வந்திருக்கும் பணம் யாருடையது என்று தெரியவில்லை.

அதுபோல நீங்கள் **மணியாடர்** அனுப்பும் போதும் உங்கள் முகவரியுடன் கட்டாயம் உங்கள் முகவரி எண்ணை எழுதுங்கள். உதாரணம்: சென்னை CN, மதுரை MD, திருச்சி TR, கோயம்பத்தூர் CB, ஈரோடு ER, திருநெல்வேலி TN, கன்னியாகுமரி KK, நாகர்கோவில் NC.

தூய ஆவியின் வழிநடத்துதலுக்கு நீங்கள் உங்களை ஒப்படைத்து தேவனுக்காக வாழுகிற நீங்கள் ஜெபத்திற்காக செலவிட்ட காலம் தேவனுக்குப் பிரியமான காணிக்கையாயிருப்பதோடு உங்களுக்கும் ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும்.

ஏவுதல்

(சென்ற மாத தொடர்ச்சி)

'வருகையின் தூதன் அலுவலகம்' பெண்கள் கிறிஸ்தவ கல்லூரி சாலையில் எண் 57 வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வந்ததை பழைய வாசகர்கள் அறிவீர்கள். அதுபோல நியுபோர்ட் தெருவில் ஊழியத்திற்கென்று வாங்கப்பட்ட ஒரு பழைய ஓடு போட்ட கட்டடத்தில் அச்சகம் எனது மேற்பார்வையில் இயங்கி வந்தது. சில காரணங்களால் இந்த பழைய கட்டடத்தின் ஒரு 'அடி'-யை கூட இடிக்க மாட்டேன் என்று என்னுடைய உள்ளத்தில் உறுதியாய் தீர்மானித்திருந்தேன்.

இப்படிப்பட்ட ஒரு சூழலில் அந்த பழைய கட்டடத்தின் மூன்றில் ஒரு பங்கை இடித்து, புதிய அலுவலக கட்டடமாக கட்ட ஏவப்பட்டேன். நான் பாலிடெக்னிக் படித்திருந்த படியால் ஒரு சர்வேயரைப் போல கட்டட வரைபடத்தை வரைந்து எனது மேஜை டிராயரில் வைத்திருந்தேன்.

வருகையின் தூதன் ஆலோசனை குழு அங்கத்தினர் ஒருவர் எனது மேஜைக்கு முன்னால் வந்து அமர்ந்தார். நான் எதுவுமே அவரிடம் கூறாமலே, "இந்த கட்டடம் சீக்கிரமாய் உயரமாய் எழும்பும்" என்று கூறினார். நமது கட்டடத்தின் எதிரே குடியிருக்கும் இரட்சிக்கப்படாத ஒரு சகோதரி ஒரு சொப்பனம் கண்டார். அதில், வீட்டிற்கு முன்னால் உயரமான ஒரு கட்டடத்தைக் கண்டு, கண்விழித்து, காலையில் வந்து பார்த்தால், அதே பழைய ஓடு போட்ட கட்டடமே இருந்தது.

கட்டடம் கட்டுவதற்கான அனுமதியைப் பெற Board of Directors-யை கூட்டினேன். அவர்கள் வந்து, என்னிடம் விசாரித்து, "உன்னிடத்தில் பணம் இல்லை, கட்டக்கூடாது" என்றார்கள். அதில் ஒருவர் "அவனுக்கு விசுவாசம் இருந்தால் செய்யட்டுமே" என்றார்கள். இவ்விதமாய் கட்டப்பட்டதுதான் நமது அலுவலக கட்டடம் "**தேவ மகிமை**".

தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாத ஒரு சகோதரிக்கு தேவன் ஏன் இந்த காரியத்தைச் சொப்பனத்தில் வெளிப்படுத்தினார்? தேவனை அறியாதவர்களோடும் தேவன் சொப்பனத்தில் பேசுவாரா? இது போன்ற கருகலான காரியங்களுக்கு வேத வசனத்தின் அடிப்படையில் பதிலளிக்கவே தேவ கிருபையால் இந்த கட்டுரையை அடியேன் எழுதுகிறேன்.

சுவிசேஷத்தை கேள்விப்பட்டிராத ஒரு பழங்குடி பெண் ஒரு தரிசனம் கண்டார். அதில், இருளான ஒரு இடத்தில் ஜனங்கள்மிகவும் துக்கத்தோடும், வேதனையோடும் இருப்பதைக் கண்டாள். தூரத்தில் வெளிச்சமான ஒரு இடத்தில் ஜனங்கள் மிகவும் சந்தோஷமாக இருப்பதையும் கண்டாள்.

பின்பு அந்த பிராந்தியத்தில் ஊழியம் செய்யும் ஒரு மிஷனெரி சகோதரனை அழைத்து தரிசனத்தைக் கூறினார்கள். அவர் அந்த பெண்ணிற்கு சுவிசேஷத்தை அறிவித்து இரட்சிப்புக்குள் வழிநடத்தினார்.

நல்லது, நம்முடைய எதிர்வீட்டு சகோதரிக்கு ஏன் சொப்பனம்? 'தேவ மகிமை' என்பது அலுவலக கட்டடம், ஆகையால் பக்கத்திற்கு 4 தூண்கள் (Pillar) வீதம் அமைத்து கட்டட வேலை நடந்து கொண்டிருந்தது. நமக்கு ஆள் துளை கிணறு (Bore Well) வசதியில்லாத தால் தெரு அற்றத்தில் இருந்த அடி பம்பு மூலம் மிகவும் சிரமப்பட்டு தண்ணீர் எடுத்து வேலை நடைபெறுவதைக் கண்ட அந்த சகோதரி, தன்னுடைய வீட்டிலுள்ள Bore மூலமாக இலவசமாக, கடைசி வரை தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் தந்தார்கள். அல்லேலூயா!

இந்த சந்தர்ப்பத்தில் நான் இன்னுமொரு காரியத்தை எழுதியே ஆக வேண்டும். தேவ மகிமை அலுவலகம் உத்தேசமாக 1994-ம் ஆண்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதைக் கட்டும் போது எனக்கு கீழாக 16 வேலை ஆட்கள் பணியாற்றினார்கள். இப்பொழுது நான் முழு நேரமாக ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்கிறேன். கட்டடம் கட்டப்பட்டு சுமார் 20 ஆண்டுகள் ஆகிறது, அதை பராமரிக்க வேண்டும் என்று வருகையின் தூதன் பத்திரிகை வழியாக கதறினேன். அலுவலகத்தில் வந்து "சந்தா" கட்டுவார்கள், ஆனால் விசாரிக்க மாட்டார்கள்.

அதே வேளை சென்னையிலுள்ள ஒரு அருமையான போதகரின் மனைவி இதை வாசித்தார்கள். போதகரிடம் சொன்னார்கள். போதகர், உதவி போதகரை சென்னையிலிருந்து நாகர் கோவிலுக்கு அனுப்பினார். அவர் வந்து ஜெபத்தோடு விசாரித்து, தேவ மகிமை கட்டட பராமரிப்பு வேலையை அவர்களே பொறுப்பெடுத்து, வங்கி வழியாக பெயின்ட் கடைக்கும், வங்கி வழியாக பெயின்ட் அடித்தவர்களுக்கும் கூலி கொடுத்தார்கள்.

"தேவனுடைய வீடு" வேலை முடியாமல் இருந்தது. இரண்டாவது முறையாக அதை விசாரித்து, கைப்பிடி சுவர்களைக் கட்டி, பூசப்படாத பகுதிகளை பூசி உதவி செய்தார்கள். ஆனால் "தேவனுடைய வீடு" சுமார் 20 வருடங்களாக பெயின்டிங் பண்ணாதபடியால் இப்பொழுது இடிந்து விழ ஆரம்பித்து விட்டது!

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

கர்த்தர் கோரேசின் ஆவியை ஏவினார்

எஸ்றா, நெகேமியா, எஸ்தர் ஆகியவை தேசத்திற்காக, ஜனங்களுக்காக மிகப்பெரிய கதறலை காண்பிக்கும் புத்தகங்கள் ஆகும். அவைகளைப் பற்றி நான் இங்கே எழுதாமல், ஏவுதலைப் பற்றி மாத்திரம் எழுதுகிறேன்.

1. பரலோகத்தின் தேவன்

அவர்களுடைய தேவன் இப் பொழுது எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்?

நம்முடைய தேவன் **பரலோகத்தில்** இருக்கிறார் சங்.115:1,2 அல்லேலூயா.

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது **பரலோகத்திலிருக்கிற நான்** கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன் 2 நாளா.7:14.

அவர்கள் எங்களுக்குப் பிரதியுத்தரமாக: நாங்கள் பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் தேவனாயிருக்கிறவருக்கு அடியாராயிருந்து, இஸ்ரவேலின் பெரிய ராஜா ஒருவன் அநேக வருஷங்களுக்கு முன்னே கட்டித்தீர்த்த இந்த ஆலயத்தை நாங்கள் மறுபடியும் கட்டுகிறோம்.

எங்கள் பிதாக்கள் **பரலோகத்தின் தேவனுக்குக்** கோபமூட்டினபடியால், அவர் இவர்களை பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்னும் கல்தேயன் கையில் ஒப்புக்கொடுத்தார்; அவன் இந்த ஆலயத்தை நிர்மூலமாக்கி, ஜனத்தை பாபிலோனுக்குக் கொண்டு போனான்.

ஆனாலும் பாபிலோன் ராஜாவாகிய **கோரேசின்** முதலாம் வருஷத்தில் **கோரேஸ்** ராஜாவானவர் தேவனுடைய இந்த ஆலயத்தைக் கட்டும்படி கட்டளையிட்டார் எஸ்றா 5:11-13.

2. கோரேசின் ஆவியை ஏவினார்

எரேமியாவின் நாவினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி, பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசுடைய முதலாம் வருஷத்திலே, கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதினாலே அவன் : எஸ்றா 1:1.

3. ஆலயத்தைக் கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்

பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார் எஸ்றா.1:2.

4. உற்சாகமாய் காணிக்கை கொடுத்து அனுப்பு

அந்த ஜனங்களில் மீதியாயிருக்கிறவன் எவ்விடத்தில் தங்கியிருக்கிறானோ, அவ்விடத்து ஜனங்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்துக்கென்று அவனிடத்தில் உற்சாகமாய்க் காணிக்கைக் கொடுத்து அனுப்புகிறதுமின்றி, அவனுக்குப் பொன் வெள்ளி முதலிய திரவியங்களையும், மிருக ஜீவன்களையும் கொடுத்து, உதவி செய்ய வேண்டும் என்று பெர்சியாவின் ராஜா வாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று தன் ராஜ்யமெங்கும் எழுதியனுப்பி விளம்பரம் பண்ணுவித்தான் எஸ்றா 1:4.

5. எவர்கள் ஆவியைத் தேவன் ஏவினாரோ அவர்கள் எல்லாரும் எழும்பினார்கள்

அப்பொழுது எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்குப் போகும்படி யூதா பென்யமீன் வம்சங்களின் தலைவரும் ஆசாரியரும் லேவியருமன்றி, **எவர்கள் ஆவியைத் தேவன் ஏவினாரோ** அவர்கள் எல்லாரும் எழும்பினார்கள் எஸ்றா 1:5.

கோரேசை போன்ற ஒரு புறஜாதி ராஜாவோடு தேவன் சொப்பனத்தில் பேசினதை எழுதி முடிக்கிறேன்.

அங்கே ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளைத் தன் சகோதரி என்று சொன்னதினாலே, கேரார் ராஜாவாகிய அபிமெலேக்கு ஆள் அனுப்பிச் சாராளை அழைப்பித்தான்.

தேவன் இரவிலே அபிமெலேக்குக்குச் சொப்பனத்திலே தோன்றி : நீ அழைப்பித்த ஸ்திரீயின் நிமித்தம் நீ செத்தாய், அவள் ஒருவனுடைய மனைவியாயிருக்கிறாளே என்றார்.

அபிமெலேக்கு அவளைச் சேராதிருந்தான். ஆகையால் அவன் : ஆண்டவரே, நீதியுள்ள ஜனங்களை அழிப்பீரோ?

இவள் தன் சகோதரி என்று அவன் என்னோடே சொல்லவில்லையா? அவன் தன் சகோதரன் என்று இவளும் சொன்னாளே; **உத்தம இருதயத்தோடும் சுத்தமான கைகளோடும் இதைச் செய்தேன்** என்று சொன்னான் ஆதி.20:2-5.

அருமையான கர்த்தருடைய பிள்ளையே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இரட்சகராக இந்த உலகத்தில் பிறந்து சுமார் 2000 ஆண்டுகள் ஆயிற்றே, சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த, தேவனை அறியாத கேரார் ராஜாவாகிய அபிமெலேக்கு சொன்னது போல, உத்தம இருதயத்தோடும் சுத்தமான கைகளோடும் இதைச் செய்தேன் என்று உங்களால் கூற கூடுமா?

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உதவி : 94897 40295 உங்கள் சகோதரன்,
அலுவலகம் : 95432 21008 **வெஸ்லி தேவதாசன்**
சமயம் : 10-01; 02-06 (WESLEY DEVADASON)

உலகத்தின் அனைத்து பகுதிகளும் மன்றாட்டு ஜெபத்தின் மூலம் ஜீவனையும் ஆசீர்வாதங்களையும் பெற முடியும்.

மன்றாட்டு ஜெபத்தின் தாக்கம்

The impact of intercession

Andrew Murray

ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட மன்றாட்டு ஜெபம் ஒரு முக்கிய ஏதுவாக தேவனால் நியமிக்கப்பட்டுள்ளது. மன்றாட்டின் மூலம் பரிசுத்தவான்களும், ஊழியக்காரர்களும் சுத்திகரிக்கப்பட்டு விசுவாசத்தில் வளருவார்கள். உலகத்தின் அனைத்து பகுதிகளும் மன்றாட்டு ஜெபத்தின் மூலம் ஜீவனையும் ஆசீர்வாதங்களையும் பெற முடியும். தூய ஆவியின் வழிநடத்துதலுக்கு நீங்கள் உங்களை ஒப்படைத்து தேவனுக்காக வாழுகிற நீங்கள் ஜெபத்திற்காக செலவிட்ட காலம் தேவனுக்குப் பிரியமான காணிக்கையாயிருப்பதோடு உங்களுக்கும் ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும். மட்டுமின்றி நீங்கள் யார் யாருக்காக ஜெபிக்கிறீர்களோ அவர்களுடைய வாழ்விலும் ஆசீர்வாதம் பொழியப்படும்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

தேவனை அறியாத கேரார் ராஜாவாகிய அபிமெலேக்கு சொன்னது போல, உத்தம இருதயத்தோடும் சுத்தமான கைகளோடும் இதைச் செய்தேன் என்று உங்களால் கூற கூடுமா?

நாம் ஆசீர்வாதங்களைப் பெறாமலிருக்க ஒன்றில் காத்திருக்கவில்லை. அல்லது அதன் பொருளைப் புரிந்து கொள்ளவில்லை.

அவர் நம்மோடு இல்லாவிடில் நாமிருக்குமிடம் பயங்கரமான **நரகம்** போலிருக்கும், அவர் நம்மோடு இருப்பது இனிய **பரதீசின்** அனுபவம்.

ஜெபம் என்பது அதை ஏறெடுக்கிறவர்களுடையதாயிருந்தாலும் அது தேவனுக்கும் சொந்தமானது. அது ஆழங்களிலிருந்து ஏறெடுக்கப்பட்டு உன்னதங்களை எட்டக்கூடியது.

நாம் பாடுபடும் நேரங்கள் ஆண்டவராகிய இயேசுவை அறிந்து கொள்ள வாய்ப்பாக அமைகின்றன.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason